THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

SIXTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Tuesday, 19th January 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. OBITUARY REFERENCE TO SRI R. S. VEERAPPA CHETTIAR, M.L.A. AND SRI H. C. DASAPPA, UNION MINISTER FOR INDUSTRY AND SUPPLY.

MR. SPEAKER: It is my painful duty to inform the House about the demise of Sri R. S. Veerappa Chettiar, sitting member of the Assembly from Dharmapuri constituency, Salem district, on 26th October 1964.

It is also my painful duty to inform the House about the demise of Sri H. C. Dasappa, Union Minister for Industry and Supply, on 29th October 1964.

On behalf of the House I will convey the condolence to the bereaved families. I request hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed souls.

The Members stood in silence for a minute.

MR. SPEAKER: As a mark of respect to the memory of Sri R. S. Veerappa Chettiar, a sitting Member of the House, I adjourn the House till 9 a.m.

The House then adjourned and re-assembled at 9-00 a.m.

II—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Fourth Finance Commission

*1 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether any written representations have been made to the Fourth Finance Commission by the State Government; and

(*b*) if so, whether a copy of the same would be placed on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Memorandum is a confidential document and it cannot at this stage be made public without the permission of the Finance Commission.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த அறிக்கையை இந்த சபை முன்பு வைப்பதற்கு என்ன ஆட்சேபணை ? இந்த அறிக்கை எப்போது சமர்ப்பிக்கப்பட்டது ? பைனான்ஸ் கமிஷன் முன்பு நிதி அமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து சாட்சியம் கொடுத்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மன்றத்தில் இந்த மெமோராண்டத்தை வைப்பது என்றால் அதை பகிரங்கப்படுத்துவதாகும். பைனான்ஸ் கமிஷன் அனுமதி இன்றி இதை பகிரங்கப்படுத்துவது சரியல்ல. இப்போது அதைப் பகிரங்கப்படுத்தும் நிலை வரவில்லையென்று கூறினேன். இன்னும் நேரடியாக பைனான்ஸ் கமிஷனைச் சந்தித்து சாட்சியம் கொடுக்கவில்லை. எப்போது இந்த மெமொராண்டம் சமர்ப்பிக்கப்பட்டது என்ற விவரம் என்னிடம் இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பு இது சமர்பிக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பைனான்ஸ் கமிஷன் அரசியல் சட்டப்படி நியமிக்கப்பட்டு, ராஜ்யங்களின் நிதிப் பங்கீடுகள் பற்றி ஆராய்ந்து யோசனை கூறக்கூடிய ஒரு ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்திற்கு முன்பு சமர்ப்பிக்கக் கூடிய யோசனைகளை இந்தச் சபையில் வைக்காமல் ஏன் அரசாங்கம் ரகசியமாக மட்டும் வைத்து இருக்க வேண்டும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தின் எவ்வளவோ ரகசியங்கள் இந்த மன்றத்தில் வைக்கப்படுவதில்லை. பைனான்ஸ் கமிஷன் ஒரு முறை வகுத்திருக்கிறது. அதன்படி நாம் நடக்க வேண்டும். பைனான்ஸ் கமிஷன் பகிரங்க விசாரணை வைத்தால் அதற்கேற்றபடி இந்த மன்றத்தில் அந்த விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசியல் சட்டத்திலோ அல்லது பைனான்ஸ் கமிஷன் வகுத்திருக்கக் கூடிய விதிகளிலோ அதன் நடவடிக்கைகள் ரகசியம் என்று எந்த இடத்திலும் இல்லை. அப்படியிருக்க, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மெமொராண்டம் மட்டும் ஏன் ரகசியமாக வைக்கப்பட வேண்டும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இரகசியம் என்று நான் கூறவில்லை. மன்றத்தில் வைக்கக் கூடியது உண்டு, வைக்கக் கூடாததும் உண்டு. அப்படி இப்போது வைக்கக்கூடிய நிலை ஏற்படவில்லை. பைனான்ஸ் கமிஷனுக்கு நாம் சில விவரங்களை அனுப்பியிருக்கிறோம் ; யதாஸ்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் நேராக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் இதை வைப்பதற்கில்லை என்றுதான் நான் கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வருமான வரிப் பங்கீடும் நிதிக் கமிஷன் ஆலோசித்து யோசனை கூற வேண்டிய ஒரு விஷயமாகும். வருமான வரி பெரும்பாலும் ஏமாற்றப்படுவதால் நம் ராஜ்ய வருவாய் குறைவதற்குள்ள அபாயம் இருப்பதால் அரசாங்கம் நிதிக் கமிஷனுக்கு என்ன காரணம் கூறி இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பைனன்ஸ் கமிஷன் இங்கு வந்து நேராக விசாரிப்பதற்கு இன்னும் சிலமாதங்களாகும். விசாரிப்பதற்கு முன்பு என்னென்ன அபிப்பிராயங்கள் கூறுவது என்பதை நாம் உருவாக்கி அதைத் தெரிவிக்கலாம். இப்போது அதைப்பற்றித் தெரிவிப்பதற்கில்லை.

பால் பாயிண்ட் பேனுக்கள்

*2 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்** (திரு. மு. கருணாநிதி சார்பில்) : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் "பால் பாயிண்ட் பேனுக்களை" உபயோகிக்கக்கூடாதென அரசாங்கம் ஏதேனும் தடை உத்திரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) and (b) : No. But it has been decided by the Government of India that signature on bills and other documents with money value should be made in ink only. The above decision of the Government of India has been communicated to all the Heads of Departments, etc. for information and guidance.

The objection to accepting signatures on documents by ball point pens is that they are apt to be smudged and fade away after some time. There is also a possibility that such signatures could be forged and altered more easily.

திரு. சா. கணேசன் : பால் பாயின்ட் பென்னால் எழுதும் எழுத்து ஃபேடாகி விடும் என்பதற்காக மட்டும்தான் அதைத் தடை செய்திருக்கிறார்களா ? அல்லது அப்பேனாவின் உதவியால் போடுகிற அல்லது எழுதுகிற எழுத்துக்கள் உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாக இல்லை என்றும் அதைத் தடை செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டு காரணங்களும் உண்டு என்றுதான் விடையில் குறிப்பிட்டேன்.

விற்பனை வரி விலக்கு

*3 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்த மீன் விற்பனைக்குக் கொடுத்து வந்த விற்பனை வரிச்சலுகை நிறுத்தப்பட்டதை மீண்டும் வரிச்சலுகை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தூத்துக்குடி ஏற்றுமதி வியாபாரிகள் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?